# பொதுச்சேவை வழங்கலின் முன்னேற்றத்திற்கு இலத்திரனியல் ஆட்சியின் பங்களிப்பு: சம்மாந்துறை பிரதேச செயலகத்தை மையப்படுத்திய விமர்சனப் பகுப்பாய்வு


ஆய்வுச்சுருக்கம்

பொதுச்சேவை வழங்கல் (Public Service Delivery) எண்ணக்கருவானது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் அரசுகளில் பிரதானதொன்றாக நோக்கப்பட்டு வருகின்றது. பொதுச்சேவை என்பது ஒரு நிறுவனத்திலுள்ள அலுவலர்களுக்கும் மக்களுக்கும் அல்லது வாடிக்கையாளர்களுக்குமிடையிலான நேர்க்கணியத் தொடர்பாகும். ஒரு நாட்டில் தேசிய ரீதியாகவும் மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினூடாகவும் பொதுச்சேவைகள் வழங்கப்படுகின்றன. பொதுச்சேவை வழங்கல் நிறுவனங்கள் வினைத்திறன் (Efficiency), விளைதிறன் (Effectiveness), சமத்துவம் (Equity) போன்ற பிரதான இலக்குகளை அடைவதை நோக்காகக் கொண்டு தொழிற்படுகின்றன. தேசிய நலனை கருத்திற் கொண்டு பொதுமக்களுக்கு அரசியல், பொருளாதார, சமூக விடயங்களை தகவல் தொழில்நுட்பத்தைப் (Information and communications technology) (ICT) பயன்படுத்தி அதனூடாக வழங்கும் செயன்முறை இலத்திரனியல் அரசாங்கம் (E – Governance) என அழைக்கப்படுகின்றது. இலத்திரனியல் அரசாங்கமானது தற்காலத்தில் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்ற ஒரு புதிய எண்ணக்கருவாகும். இன்று இலங்கையில் பாடசாலைகள், பல்கலைக்கழகம், மின்சாரசபை, போக்குவரத்துசபை, பிரதேசசபை, பிரதேசசெயலகம், தபால் அலுவலகம், நீதிமன்றம் போன்ற பல்வேறு பொதுநிறுவனங்கள் பொதுச்சேவை வழங்கல் செயற்பாடுகளில் எதிர்பார்ப்புக்கள், அநுபவம் போன்றவற்றை அடையாளம் காண்பதோடு பொதுச்சேவையின் தரத்தை அளவீடு செய்தலை பிரதான நோக்காகவும் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பொதுச்சேவை வழங்கலின் துரித முன்னேற்றத்திற்கு இலத்திரனியல் அரசாங்கத்தின் தேவை மற்றும் பங்களிப்பினை அடையாளப்படுத்துவது இவ்வாய்வின் துணைநோக்கமாகும். இவ்வாய்வானது விபரணரீதியான பகுப்பாய்வு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டதாகும். இங்கு அளவுசார் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தரவுகள் முதன்நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. முதன்நிலைத் தரவுகளானது வினாக்கொத்து, நேர்காணல் அவதானம் ஆகிய ஆய்வு நுட்பங்களைக் கொண்டும் இரண்டாம் நிலைத்தரவு மூலங்களான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம், பிரதேசசெயலக அறிக்கைகள், இத்துறை சார்ந்த ஆய்வுகள் என்பவற்றிலிருந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகளை MS Excel 2007 மூலம் பகுப்பாய்வு செய்து முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.



திறவுச் சொற்கள஌;: Public Service Delivery, E-Governance and Information Communication Technology (ICT)